## இயல் 6.9 - பின்னங்கள்

பயிற்சி எண் :: 6.9.1.3.F

பின்னங்கள் - பின்னங்களின் பெருக்கல்

## பின்னங்கள் - பின்னங்களின் பெருக்கல்

பின்னங்களில் பெருக்கலை ஒரு உதாரணத்தின் மூலம் விளக்குக.

பின்னங்களின் பெருக்கலை மூன்று வகையாகப்பிரிக்கலாம். மூன்றும் மிக எளிமையானவையே. கீழே ஒவ்வொன்றும் தனித்தனி உதாரணங்களுடன் விளக்கப்பட்டுள்ளன.

### பின்னங்களை முழு எண்களால் பெருக்குதல்

1. கொடுக்கப்பட்டுள்ள முழு எண்ணால் தொகுதியைப் பெருக்க வேண்டும். பகுதியில் மாற்றம் ஏதும் செய்யத்தேவையில்லை.
2. இதிலிருந்து கிடைப்பது விடையாகும்.

$$\frac{2}{3} \times 2$$

$$\frac{2 \times 2}{3}$$

$$\frac{4}{3}$$

$$\frac{2}{3} \times 2 = \frac{4}{3}$$

### பின்னங்களை பின்னங்களால் பெருக்குதல்

1. பின்னங்களின் தொகுதியை தொகுதியுடனும் பகுதியை பகுதியுடனும் பெருக்க வேண்டும்.
2. இதிலிருந்து கிடைப்பது விடையாகும்.

$$\frac{1}{2} \times \frac{3}{5}$$

$$\frac{1 \times 3}{2 \times 5}$$

$$\frac{3}{10}$$

$$\frac{1}{2} \times \frac{3}{5} = \frac{3}{10}$$

### கலப்பு பின்னங்கள் அடங்கிய பெருக்கல்

1. கொடுக்கப்பட்டுள்ள கலப்பு பின்னங்களை முதலில் தகா பின்னங்களாக மாற்றிக்கொள்ள வேண்டும்.
2. பின்னர், பின்னங்களின் தொகுதியை தொகுதியுடனும் பகுதியை பகுதியுடனும் பெருக்க வேண்டும்.
3. கணக்கு கலப்பு பின்னத்தில் கொடுக்கப்பட்டிருப்பதால் நாம் விடையையும் தகா பின்னத்திலிருந்து கலப்பு பின்னமாக மாற்றி எழுத வேண்டும்.

$$4\frac{1}{2} \times \frac{5}{7}$$

$$\frac{9}{2} \times \frac{5}{7}$$

$$\frac{9 \times 5}{2 \times 7}$$

$$\frac{45}{14}$$

$$3\frac{3}{14}$$

$$4\frac{1}{2} \times \frac{5}{7} = 3\frac{3}{14}$$


## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Tuesday 15th February, 2022 :: 18:18 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**